**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09 ம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.262/2019**

**இ.ம.எண்.9/2026**

மாறன் ...**மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

ஜோதிலட்சுமி ..**எதிர்மனுதாரர்/பிரதிவாதி**

இம்மனு எனது முன்னிலையில் கடந்த 27.03.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மது அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால், மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணையை திறக்க கோரி அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் வாதியாவார். மனுதாரர் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மேற்படி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் தாவா சொத்து சம்பந்தமாக வாதியின் தந்தை மற்றும் அவரது சித்தப்பா பெயரில்

ஏற்பட்ட மனைவரி தோராய பட்டா, பட்டா எண்.311 என்ற பட்டாவை வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார். எனவே, மேற்படி ஆவணத்தின் உண்மைத்தன்மையை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர்/வாதி பக்கம் உள்ளது.

**3)** அதன்பேரில், வருவாய் துறையினராகிய குளித்தலை வட்டாட்சியர் அவர்களுக்கு சாட்சி அழைப்பாணை அனுப்ப வேண்டி மனுதாரருக்கு அவசியம் ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, இந்த வழக்கின் பிரதிவாதி தாவா சொத்து சம்பந்தமாக தாக்கல் செய்த தான செட்டில்மென்ட் பத்திரத்தின் இணைப்பில் ஒரு போலியான மனைவரி தோராய பட்டா பட்டா எண்.311 என்ற எண்ணில் உள்ளது. இவ்வாறு இருக்கையில், மேற்படி பட்டாவின் உண்மைத்தன்மையை கண்டறிய குளித்தலை வட்டாட்சியர் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்ப மனு செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் தரப்பில் சாட்சி மேற்கொள்ள மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி விசாரணையை மீண்டும் திறக்க வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி, தவறு வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல. அது மன்னிக்கக்கூடியது ஆகும். இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படாது. இல்லாவிடில் மனுதாரருக்கே அதிகப்படியான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டள்ளது.

**<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**4)** மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானதும், தவறானதும் ஆகும். மனுதாரருக்கு மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரரால் நிரூபணம் செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ள பட்டாவானது ஒரு பொது ஆவணம் ஆகும். எனவே, மேற்கண்ட பொது ஆவணத்தை பொறுத்து சாட்சியம் அளிக்க

குளித்தலை வட்டாட்சியரை சாட்சியாக அழைத்து விசாரிப்பது தேவையற்ற ஒன்றாகும். மேற்படி ஆவணங்களைப் பொறுத்து உண்மை நகல்களை வருவாய் துறை அலுவலகத்தில் பெற்று மனுதாரரால் அனைத்து வகையிலும் நிரூபணம் செய்ய இயலும். மனுதாரரால் மேற்படி தான செட்டில்மென்ட் பத்திரத்தின் இணைப்பில் உள்ள பட்டா எதிர்மனுதாரரால் போலியாக பெறப்பட்டுள்ளதாக சொல்வது முற்றிலும் தவறு. மேற்படி அசல் வழக்கை கால தாமதம் செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்வது அவசியம் ஆகும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

5) மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணையை திறக்க கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

6) இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

7) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளைப் பரிசீலனை செய்கையில், மேற்படி அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் கடந்த 05.12.2016ம் தேதியிட்ட பிரதிவாதியின் தந்தையால் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட தாவா சொத்தைப் பொறுத்த தான செட்டில்மென்ட் ஆவணத்தை

செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்ய விளம்புகை பரிகாரத்திற்காகவும், தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும் மேற்படி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பிலும் சாட்சி விசாரணைகள் முடிக்கப்பட்டு, இரு தரப்பு வாதுரைக்காக இந்நீதிமன்றத்தால் வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இம்மனுவானது மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணையை மீண்டும் திறக்கக் கோரி அனுமதி வேண்டி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8)** மனுதாரர் தரப்பில் தாவா சொத்தைப் பொறுத்த பட்டாவானது, மனுதாரரின் தந்தை மற்றும் அவரது சித்தப்பா ஆகியோரின் பெயரில் பட்டா எண்.311 என்ற மனைவாரி தோராய பட்டா ஏற்பட்டு மேற்படி ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் பிரதிவாதியின் தந்தையால் பிரதிவாதிக்கு தாவா சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தின் பின் இணைப்பில் மேற்படி பட்டா எண்.311 என்ற பட்டாவானது போலியாக பெறப்பட்டு மேற்படி தான செட்டில்மென்ட் ஆவணமானது முறைகேடாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி பட்டாவின் உண்மைத்தன்மையை கண்டறியும் பொருட்டு குளித்தலை வட்டாட்சியருக்கு சாட்சி அழைப்பாணை சார்வு செய்து வாதி தரப்பில் விசாரிக்க வேண்டியது நீதியின் பொருட்டு நியாயமும், அவசியமுமாய் உள்ளது என்றும் கூறி இம்மனுவை அனுமதிக்க வேண்டி வாதிடப்பட்டது.

**9)** மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரால் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்பட்டு மேற்படி பட்டாவானது ஒரு பொது ஆவணம் என்றும், அதன் உண்மை நகலை வருவாய் துறை அலுவலகத்தில் மனுதாரரால் பெற்றுக்கொண்டு அதை நிரூபணம் செய்யமுடியும் என்றும், மேற்படி பொது ஆவணத்தைப் பொறுத்து குளித்தலை வட்டாட்சியருக்கு சாட்சி அழைப்பாணை

சார்வு செய்து விசாரிக்க வேண்டியது அவசியமற்றது என்றும், மேற்படி அசல் வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிடப்பட்டது.

**10)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர்/வாதியால் மேற்படி அசல் வழக்கில் தாவா சொத்து மனுதாரரின் தந்தை மற்றும் அவரது சித்தப்பா ஆகியோர்க்கு பாத்தியப்பட்டது என்றும், மனுதாரரின் சித்தப்பாவிற்கு வாரிசுகள் இல்லை என்றும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுதாரரின் தங்கை என்றும், மனுதாரரின் தந்தைக்கு இரண்டு மகள்கள் இருந்தனர் என்றும், அவர்களுக்கு நல்ல முறையில் சீர் வரிசைகள் செய்து அவரது தந்தை திருமணம் செய்து கொடுத்துவிட்டதாகவும், தாவா சொத்தில் பிரதிவாதியும் மற்றொரு சகோதரியுமான செல்லம்மாள் என்பவர் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பங்கினை பொறுத்து வாதிக்கும், அவரது சகோதரர்களுக்கும் விடுதலை செய்து கொடுத்துவிட்டதாகவும், அதனைத் தொடர்ந்து வாதி மற்றும் அவரது சகோதரர்களுக்கு இடையே தாவா சொத்தைப் பொறுத்து வாய்கராராக பாகப்பிரிவினை ஏற்பட்டு அதன்படி அவரவர்கள் பாகத்தை பிரித்துக் கொண்டு அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில் பிரதிவாதி தாவா சொத்தில் வாதியின் உரிமையை பறிக்கும் முறையில் போலியாக தனது தந்தையிடம் ஒரு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தை பெற்றுக் கொண்டார் என்றும் கூறி, மேற்படி அசல் வழக்கானது மேற்கண்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தை இல்லாநிலையது என்று விளம்புகை செய்திட விளம்புகை பரிகாரத்திற்காகவும், தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**11)** இருப்பினும், மேற்படி அசல் வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் சாட்சி விசாரணை மேற்கொள்ள போதுமான வாய்ப்புகள் இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டு, இரு தரப்பிலும் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, இரு தரப்பு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இம்மனுவானது வாதி தரப்பு சாட்சி விசாரணையை மீண்டும் திறக்க மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தைப் பொறுத்து மனுதாரர், வா.சா.ஆ.1 பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. மேலும், பிரதிவாதியால் மேற்கண்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தின் பின் இணைப்பில் தாவா சொத்திற்குரிய பட்டா எண்.311 போலியாக பெறப்பட்டு, மேற்கண்ட தான செட்டில்மென்ட் ஆவணத்தில் இணைக்கப்பட்டு பிரதிவாதி பெயரில் மேற்படி ஆவணம் ஏற்பட்டுள்ளதாக மனுதாரரால் கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி பட்டாவின் உண்மையை அறியும் பொருட்டு குளித்தலை வட்டாட்சியருக்கு சாட்சி அழைப்பாணை சார்வு செய்து வாதி தரப்பில் சாட்சியாக விசாரணை மேற்கொள்ள மேற்படி அசல் வழக்கை மீண்டும் திறக்க மனுதாரர் கூறப்பட்டுள்ள காரணமானது நீதியின் பொருட்டு ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**12)** மேலும், இம்மனுவை அனுமதிக்க எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிட்ட ஆட்சேபனை எதுவும் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது. மேற்படி அசல் வழக்கில் எழுந்துள்ள எழுவினாக்களைப் பொறுத்து தீர்வு காணும் பொருட்டும், இரு தரப்பினர்களுக்கும் போதுமான வாய்ப்புகள் வழங்கி இரு தரப்பினர்களுக்கும் முழுமையான நீதி பரிபாலனம் வழங்கிட இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பொருட்டு அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கில் எழுந்துள்ள எழுவினாக்களை பொறுத்து தீர்மானம் செய்ய குளித்தலை வட்டாட்சியரை சாட்சியாக அழைத்து விசாரிக்க வேண்டியது அவசியம் என்றும், அவ்வாறு விசாரணை செய்வதால்

மேற்படி எழுவினாக்களை பொருத்து இந்நீதிமன்றத்தால் தெளிவாக முடிவு செய்யமுடியும் என்பதாலும், மேற்படி அசல் வழக்கின் வாதி தரப்பு சாட்சி விசாரணையை திறப்பது நீதியின் பொருட்டு அவசியமானதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணையானது இதன்மூலம் மீண்டும் திறக்கப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.09 17:45:06 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | – | இல்லை |

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.04.09 17:45:11 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**